1983 ஜனவரி 31]

வில்லையென்றால், மிகக் குறைவாக இருக்கிற பகுதிகளில், மிக ரெமோட்டான பகுதிகளில் இருக்கிற பிளாக்ரைட்டைப் பொறுத் வரைக்கும் தனியாருக்குக் கொடுக்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

சோளிங்கர் நகருக்கருகிலுள்ள மலைப் பகுதிகளில் கிடைக்கக் கூடிய கனிப்பொருள்.

*வினா எண். 77 திரு. சி. கோபால்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் சோளிங்கர் நகருக்கு அருகில் உள்ள மலைப்பகுதிகளில் கனிப்பொருள் ஏதாவது கிடைக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளனவா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: ஆம். இது 'டாமின்' நிறுவனத்தின் ஆய்விலுள்ளது.

கூடலூரிலுள்ள மைக்கா சுரங்கங்கள்.

*வினா எண். 78 திரு. கே. உச்சி:—மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூரில் மைக்கா சுரங்கங்களைத் தனியார் அனுபவித்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வருடம் ஒன்றுக்கு உற்பத்தியாகும் மைக் காவின் அளவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ் திருநாவுக்கரசு: (அ) ஆம்.

(ஆ) 1979-80 ஆண்டு 23 டன்னும் 1980–81 ஆம் ஆண்டு 58 டன்னும் மைக்கா அந்தப் பகுதியில் தோண்டி எடுக்கப் பட்டுள்ளது. ஏற்கனவே ஆரம்பத்திலே லீஸ் பெற்ற சுமார் 12 பேர்கள் அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

திரு, கே. உச்சி: தலைவர் அவர்களே, அந்த லீஸ், உரிமம் பெற்றவர்கள் எந்த அடிப்படையில் பெற்றிருக்கிறார்கள் என் பதையும் அதனால். அரசுக்கு என்ன இலாபம் கிடைக்கிறது என்றும் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, அரசுக்கு சீனரேஜ் கிடைக்கிறது? என்ன அடிப்படையிலே என்றால் அதிலே அடிப்படை ஒன்றும் இல்லை,

டாமின் நிறுவனம் செய்யமுடியாத பகுதிகளில். தேவையில்லை யென்ற பகுதிகளில், மிகக் குறைவாக இருக்கிற பகுதிகளில், தனியார்கள் விண்ணப்பம் செய்கிறபொழுது, அது மாவட்ட ஆட்சித் தலைவரால் பரிசீலிக்கப்பட்டு, ஜியலாஜிஸ்ட்டால் பரிசீலனை செய்யப்பட்டு, தொழில் துறை இயக்குநரால் பரிசீலனை செய்யப்பட்டு, தொழில் துறை செயலாளரால் பரிசீலனை செய்யப்பட்டு அதற்குப் பிறகு முடிவு எடுக்கப்படுகிறது.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, அந்த மைக்கா தொழில் மிகவும் இலாபகரமான ஒரு தொழில். அந்தத் தொழிலில் அதிகமாக ஆந்திரத்து மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதனால் நம் பகுதியிலே உள்ளவர்கள் அப்பணியை செய்ய முன்வருவார்களானால் அதற்கு முன்னுரிமை வழங்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: யார் முன் வந்தாலும் அரசு பரிசீலிக்கும்.

திரு. மு. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிவளத்தின் மூலம் தனியார்கள் கொள்ளை இலாபம் அடிப்பதைத் தடுப்பதற்காக அதை அரசுடைமையாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு, தமிழ்நாடு கனிம நிறுவனம், தமிழ் நாடு மாக்னசைட் கார்ப்பரேஷன் என்ற இந்த இரண்டு நிறுவனங்களும் தமிழகத்திலே வெட்டப்படுகிற கனிமங்கள் தனியார்களிடம் இருக்கின்றன என்ற காரணத்தால், அரசாங்கமே அவற்றை வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்ய வேண்டுமென்ற உணர்வோடுதான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நிறுவப்பட்டு, அந்த இரண்டு நிறுவனங்களும்—தமிழ்நாடு கனிம நிறுவனம், தமிழ்நாடு மாக்னசைட் கார்ப்பரேஷன்—இலாபத்தில் இயங்கிக் கொண்டு வருகின்றன. இந்த இரண்டு கார்ப்பரேஷன்களும் தன்னாலே முடிந்த பகுதிகளில் எல்லாம் கனிமங்களை வெட்டியெடுத்து, உள்நாட்டிலேயும் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்தும் விற்கும் பணியிலே ஈடுபட்டிருக்கின்றன.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கூடலூரில் மைக்கா மைன்ஸ் இருக்கிற பகுதி முழுவதும் ஏராளமான மைக்கா டெப்பாசிட்ஸ் இருக்கின்ற இடம் தனியார்கள் உரிமம் பெற்று பல சந்தர்ப்பங்களில், அவர்கள் அந்த மைக்கா மைன்ஸை மூடி விட்டுப் போய் விடுகிறார்கள். அதனால் அந்த மைக்கா பொருள் உற்பத்தியும் நின்றுபோகிறது, தொழிலாளர்களுக்கும் வேலை போகிறது. ஆகவே, அந்த நிலைமையை அரசாங்கம் கணக்கில் கொண்டு, அரசுக்கு நல்ல வருமானம் சம்பாதித்துக்

1983 ஜனவரி 31]

கொடுக்கும் என்ற அந்த முறையில் லீசுக்கு விடாமல் அதை அரசாங்கம் தானே எடுத்து, தான் வைத்திருக்கக்கூடிய கனிமப் பொருள் கார்ப்பரேஷன் மூலமாகவே இதையும் நிர்வகிக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னதைப் போல் 12 பேர்களுக்கு, 1970-லேயே லீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுதெல்லாம் அதிகபட்சம் ஆறு ஆண்டுகளுக்கு மேலே அவர்களே வெட்டியெடுத்துத் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்தும் அந்த அமைப்பாக இருந்தால்தான் கொடுக்கிறோம். வெட்டி எடுத்து விற்பவர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்குத்தான் கொடுக்கிறோம். 1979-ஆம் ஆண்டு சமயத்தில் 20 ஆண்டுகள் என்று கொடுத்து அது 93, 92, 89, 88, 85 என்று இப்படித்தான் லீஸ் முடிகிறது. அதை நாம் இடையிலே தடுத்தால் அவர்கள் நீதிமன்றத்திற்குப் போகக்கூடிய வாய்ப்பிருக்கிறது. ஏற்கெனவே லீஸுக்குக் கொடுத்து 93-லேதான் முடிகிறது என்றால் அதை இப்பொழுது நாம் நிறுத்த முடியாது. ஆனால் புதிதாக எடுக்கின்ற அளவிற்குத் தரமாகவும் இருந்து அதிகமாகவும் இருந்தால் டாமின் நிறுவனம் அந்த முயற்சியிலே ஈடுபடும்.

தொழில் நிறுவனங்களுக்காக செய்யப்படும் நில ஆர்ஜிதம்.

*வினா எண். 79—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நிறுவப்படும் தொழில் நிறுவனங்களுக்கு அரசு அல்லது தனியார்துறை நிலம் ஆர்ஜிதம் செய்யும்போது அதனால் பாதிக்கப்படும் நில சொந்தக்காரர்களின் குடும்பத்தாருக்கு அந்த நிறுவனங்களில் வேலை வாய்ப்பு அளிக்க அரசு திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: அரசு நிறுவனங்களுக்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு நிலமிழந்த குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு நபர் வீதம் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை தனது 29-6-1978 ஆம் நாளிட்ட ஆணை நிலை எண் 656-ல் அரசு அனைத்து பொதுத்துறை நிறுவனங்களும் நிலமிழந்த குடும்பங்களுக்கு, குடும்பத்திற்கு ஒருவர் வீதம் வேலை வாய்ப்புத் துறையினை அணுகாமல் நேரடியாக வேலை வாய்ப்பளிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. இந்த ஆணை தற்பொழுது அமுலில் உள்ளது.